# இருகரங்களை நோக்கி ஆயிரம் கரங்கள்!

விழுப்புரம், திண்டிவனம் மாவட்டங்களில் இரண்டு நாட்கள்,
திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நாட்கள்,
என நான்கு நாட்கள்
கழகத்தின் தலைவர்!
தமிழகத்தின் முதல்வர்!
தளபதி அவர்களோடு
சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.
அவர் பெற்ற வரவேற்புகளைக் கண்டு
வியந்து போனேன்!

தலைவர் கலைஞரோடு எத்தனையோ முறை
தமிழகத்தைச் சுற்றி வந்திருக்கிறேன்!
வானளாவிய வரவேற்புகளை
கலைஞர் பெற்றதையும் பார்த்திருக்கிறேன்!
ஏன் மலைத்தும் இருக்கிறேன்!
ஆனால், தற்பொழுது தளபதி பெற்றுவரும்
வரவேற்பைப் பார்த்தபின்
இனி எவரும் இப்படி ஒரு வரவேற்பைப் பெற முடியாது
என்ற முடிவுக்கே வந்துவிட்டேன்!

ரோம் நாட்டு பெருவீரன் ஜூலியஸ் சீசர்
வெற்றி பெற்ற பின்னர்
ரோம் நகருக்குள் நுழையும் பொழுது
ரோமாபுரி மக்கள் சீசரை வரவேற்றார்கள்.
அந்த வரவேற்பு நிகழ்ச்சிதான் இன்றுவரை
உலகத்திலேயே பாராட்டத்தக்க வரவேற்பு நிகழ்ச்சி என்று
சரித்திர ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள்.
இந்த நிகழ்ச்சிகளை நான் பார்க்கவில்லை
ஆனால் படித்திருக்கிறேன்.
தளபதிக்கு நெல்லைத் திருநகரில் கிடைத்த வரவேற்பைப் பார்த்த போது
எனக்கு அந்த நிகழ்ச்சிதான் ஞாபகத்திற்கு வந்தது!
தாமிரபரணி ஆற்றங்கரையிலிருந்து
பாளையில் உள்ள ஜவகர் மைதானம் வரையில்
நெடுஞ்சாலையில் வந்தபோதும்,
அங்கே இருக்கின்ற இரண்டொரு தெருக்களின் வழியே வந்தபோதும்,
நெல்லைத் திருநகரின் நான்கு மாட வீதிகளைச் சுற்றிவந்தபோதும்,
சென்னை திரும்ப முற்பட்டபோதும்,
அடடா எத்தனை வரவேற்புகள்!
வீரர் தீரர்களெல்லாம் வீதிகளில்
வாழ்த்து முழக்கங்களோடு அலைஅலையாய் நிற்க!
வீடுகளில் எல்லாம் தாய்மார்கள் வாஞ்சையோடு சிரிப்பைச் சிந்தி
கைகளைக் குவித்து வணக்கம் தெரிவிக்க!
பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள்
ஜல்லிக்கட்டு காளைகளாக மாறி
எப்படியும் தளபதியோடு கைகுலுக்கிட வேண்டும் என்று
முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்!

காணும் இடங்களிலெல்லாம் கழகக் கொடிகள்!
வீதிகளிலெல்லாம் தோரணங்கள்!
வீட்டின் முற்றங்களில் மாலைகள்!
எங்கும் மக்கள் கூட்டம்!
எந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சியிலும்
எந்தத் தலைவரும் செய்யாத ஒரு புதுமையை
தலைவர் தளபதி செய்ய துணிந்திருக்கிறார்!

கட்டுக்கடங்காத கூட்டம்
ஒருவர் வைத்த அடியை எடுத்து
வேறு இடத்தில் வைக்க முடியாத
அளவிற்கு அந்தக் கூட்டத்தில்



அப்படி ஒரு நெருக்கம்!
அதிலும் திண்டிவனத்தில்,
இரவு தன் ஆதிக்கத்தைத் தொடங்கிவிட்ட நேரம்

மின்விளக்குகளோ பெயருக்கு இருந்ததே தவிர
தங்களை அதிகம் வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொள்ளவில்லை!
அந்த நேரத்தில் மக்கள் கடலில் நீந்த ஆரம்பித்துவிட்டார் தளபதி!
போலீசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை!
மக்கள் கூட்டத்தையும் தளபதியையும் பார்த்து
என்ன நடக்குமோ என்று நான் பயந்துவிட்டேன்
"இப்படியா முதல்வரை மாபெரும் கூட்டத்தில் செல்ல அனுமதிப்பீர்கள்"
என்று காவல்துறை அதிகாரிகளைக் கடிந்து கொண்டேன்.
அதற்கு நேர்மாறாக நெல்லைத் திருநகரில் வரவேற்பு!



**துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்

தாமிரபரணி ஆற்றுக்கு இருபக்கமும் கரைகட்டியது போல்
வீதிகளில் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும்
குழந்தைகளும் நின்ற காட்சி மறக்க முடியாத காட்சியாகும்!

தளபதி தங்கள் அருகில் வருவதைக் கண்டதும்
மடை திறந்த வெள்ளம்போல் மக்கள் கூட்டம்!
போலீஸ் காவல் பற்றிக் கவலைப்படாமல்
தளபதியின் காரை நெருங்கியவுடன்
தாய்ப்பறவை கூண்டில் தன் குஞ்சுகளைப் பார்த்தவுடன்
தாவி அவைகளை தன் சிறகுக்குள் அணைத்துக் கொள்வது போல்

தளபதி தாய்ப்பறவையாகி
காரைவிட்டு இறங்கி இரு கரங்களையும் நீட்டி,
பாசத்தைப் பொழிகின்ற சிரிப்பைச் சிந்தி,
அவர்களை அணைக்கச் சென்றபோது,

தலைவரின் இரு கரங்களை நோக்கி
ஆயிரம் கரங்கள் நீட்டி நின்ற காட்சி கண்கொள்ளாத காட்சியாகும்!

நெல்லையில் நான்கு மாட வீதிகளையும் சுற்றி
பின்னர் நெடுஞ்சாலையில் பயணித்தபோதும்,
தாமிரபரணிக் கரையில் இருந்து ஜவஹர் மைதானம் வரை
நடந்தே சென்றபோதும்,
தாய்மார்கள் மடியிலிருந்த குழந்தைகளை எல்லாம் வாங்கி
தன் கரங்களில் தாங்கி முத்தமிட்ட காட்சியின் போதும்!
மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்து
"தளபதி வாழ்க ! தளபதி வாழ்க!"
என்று ஒலித்த குரல்களின் ஓசை
அந்த முக்கடல் ஓசையை வென்றிருக்கும் என்பேன்!
இதற்கிடையே
பல ஆயிரம் கோடி முதலீட்டுடன் துவங்கப்பட்ட
தொழிற்சாலைக்கு முதல்வர் தளபதி அடிக்கல் நாட்டினார்!

மறுநாள் ஊருக்குத் திரும்பும் முன்
விமான நிலையத்துக்குச் செல்லும் வழியில் ஒரு அரசு விழா!
"அரசு விழாவா!" அது என்ற ஆச்சர்யம் எனக்கு!
அவ்வளவு பெரிய கூட்டத்தை நான் சமீபத்தில் பார்த்தது இல்லை!
இனியும் பார்க்கமுடியுா என்ற சந்தேகம் எனக்கு!

தளபதி அவர்கள் முதலமைச்சர் என்ற ஸ்தானத்தில் நின்று
அற்புதமாக உரையாற்றினார்!
நெல்லைக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்தார்!
பிரியா விடைபெற்று நெல்லையை விட்டுப் பிரிந்து வந்தோம்!

இளைஞர் அணிச் செயலாளராக!
கழகத்தின் தலைவராக!
தமிழகத்தின் முதல்வராக!
இந்த மூன்று நிலையையும்
ஒரே நிலையாக்கி அன்றைக்கு
நம் தலைவர் தளபதி செய்துகாட்டிய அற்புதத்தைக் கண்டு
நான் திகைத்துப் போனேன்!

**கலைஞர் என்ற இமயத்தின் கொடுமுடிவரை பார்த்த**
**என்னையே வாய்பிளக்க வைத்து விட்டாயே என் தலைவா!**
**மற்றவர் கதி என்னவோ!**

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த தாமிரவருணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புக் கால்வாய் திட்டம்!

# வறண்ட பூமி வளமான பூமியாக மாறுகிறது!

## மழை மறைவு பகுதி மக்களின் கனவு நனவாகிறது! விவசாயம் செழிக்கும்!

**நெல்லை, பிப் 9-**

**திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்த உபரி நதி நீர் இணைப்புத் திட்டமான தாமிரவருணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புக் கால்வாய் திட்டமானது நதிகள் இணைப்புக்கு முன்னோடியாக கருதப்படுகிறது.**

திருநெல்வேலி மாவட்டத்தின் மூலைக்கரைப்பட்டி, முனைஞ்சிப்பட்டி, ஆயன்குளம், திசையன்விளை, தூத்துக்குடி மாவட்டத்தின் சாத்தான்குளம் எம்.எல்.தேரி, சுற்று வட்டாரங்கள் மழை மறைவு பகுதிகளாகும்.

இதன் காரணமாக அங்கு எப்போதுமே வறட்சி நிலவுகிறது. அந்தப் பகுதிகளை வளமையாக்க தாமிரவருணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு வெள்ளநீர்க் கால்வாய் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்திருந்தனர்.

அதன்படி, தாமிரவருணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு வெள்ளநீர்க்கால்வாய்திட்டமானது, கடந்த 2009ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம்தேதி ரூ.369 கோடி மதிப்பீட்டில் அப்போதைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பின்னர், ஆட்சி மாற்றங்களால் கிடப்பில் போடப்பட்ட இந்தத் திட்டம், சில ஆண்டுகளுக்குப் பிறகு தீவிரமடைந் தது. 2019இல் நடைபெற்ற நான்குனேரி இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் வாக்குகளைப் பெறுவதற்காக இத்திட்டத்தை கையில் எடுத்து பிரசாரம் செய்தன.

எனினும் அப்போதைய முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி இத்திட்டத்தை விரைவுபடுத்த, அதைத்தொடர்ந்து வந்த தி.மு.க. அரசும் தீவிர முனைப்பு காட்டியது. இறுதியில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு தாமிரவருணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு வெள்ளநீர்க் கால்வாய் திட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெள்ளிக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ரூ.369 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், காலங்கள் கடந்ததால் ரூ.1060.76 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. தாமிரவருணி ஆற்றிலிருந்து கடலில்உபரியாக கலக்கும் வெள்ள நீரில் விநாடிக்கு 3,200 கனஅடி வீதம் 10 நாள்களுக்கு 2,765 மில்லியன் கனஅடி நீரை கருமேனியாறு - நம்பியாறு நதிகளுடன் இணைப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

இந்த வெள்ளநீர்க் கால்வாயானது திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளங்குளி அருகே கன்னடியன் கால்வாயிலிருந்து 67.075 கி.மீ., தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கி.மீ. என மொத்தம் சுமார் 75.085 கி.மீ. தொலைவு சாத்தான்குளம் எம்.எல்.தேரி வரை பாய்கிறது.

இதன்மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 14,084.98 ஹெக்டேர் பரப்பு, தூத்துக்குடி மாவட்டத்தில் 8,905.02 ஹெக்டேர் பரப்பு என மொத்தம் 23,040 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்கள், 177 குளங்கள், 2,657 கிணறுகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்கள், 75 குளங்கள், 2,563 கிணறுகள் என மொத்தம் 50 கிராமங்கள், 252 குளங்கள், 5,220 கிணறுகள் பயன்பெறும்.

கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சோதனை ஓட்டத்துக்காக வெள்ள நீர்க் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. வெள்ளநீர்க் கால்வாயின் கடைசி குளம் தவிர அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீர் சென்றடைந்துள்ளது.

தென் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர் 13 முதல் 19 வரை கன்னடியன் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டு, வெள்ளநீர்க் கால்வாய் வழியாக கருமேனியாறு திருப்பு அணை, சுவிசேஷபுரம் குளம், இடையன்குடி வழங்கு கால்வாய், நம் பியாறு இணைப்புக் கால்வாய் பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடைந்தது.

தற்போது வெள்ளநீர்க் கால்வாய் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருப்பதன் மூலம் மழை மறைவு பகுதி மக்களின் கனவு நனவாகியுள்ளது.

வரும் காலங்களில் வறண்ட பூமி வளமையான பூமியாக மாறும். விவசாயம் செழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.